[31st October 1962

அந்தத் தண்ணீர் ஊற்றை நன்றாக ஆராய்ந்து பார்த்தோம். கொஞ்சம் ஆழம் போனவுடன் குடிக்கிற நல்ல தண்ணீர் வந்து விட்டது.

* 955 கேள்வி.—திரு. பி. பழனிப் பிள்ளை: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வடாற்காடு ஜில்லாவில் போளூர் தாலுக்கா அரும்ப லூர் கிராமத்தில் இரும்பு தாதுப் பொருள் கிடைப்பது சர்க்காருக் குத் தெரியுமா ?

(இ) இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) & (இ) 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், இந்த இடம் ராஜ்ய பூகர்ப்ப ஆராய்ச்சி யாளர்களால் பரிசோதிக்கப்பட்டதில், அரும்பலூருக்கு அருகே சுமார் 4 மிலியன் டன் மட்டாக இரும்பு தாது கிடைப்பதாக மதிப் பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அது உருக்கு ஆலை ஏற்படுத்து வதற்குப் போதிய அளவினதாக இல்லை.

* 956 கேள்வி.—திரு. எஸ். மணி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

பெரம்பலூர் தாலூகாவில் ஒதியம் கிராமத்தின் அருகில் கிடைக்கும் ஜிப்ஸத்தை எடுக்கும் தொழிலை அரசாங்கமே எடுத்து நடத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes, Sir, Proposals are under consideration.

* 957 கேள்வி.—திரு. சா. ராமசாமி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

திருச்சி உடையார்பாளையம் வட்டம் ஆண்டிப்பட்டாக்காடு பஞ்சாயத்திலுள்ள சுண்டக்குடி கிராமத்தில் வெள்ளி கிடைப்பதாக வெளியான செய்தி உண்மையா ?

THE HON. SRI R. VENKATARAMAN: No, Sir.

நூல் விலை

* 963 கேள்வி.—திரு. சா. கணேசன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) அத்தியாவசியப் பண்டங்களின் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டப்படி நூல் விலையை நிர்ணயித்து அதன்படி விற்க வேண்டு மென்று விதி செய்யும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

(இ) நூல் விலையைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று ஆலை அதிபர்களை அரசாங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறதா ?

31st October 1962]

(உ) நூல் விலை ஏற்றத்தால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படாமலிருக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) No, Sir.

(இ) Yes, Sir.

(உ) I would invite the attention of the Honourable Member to the Statement placed on the table of the House on 16th July 1962 in reply to the Starred Legislative Assembly Question No. 321 by Sri A. K. Subbiah, M.L.A., indicating the action taken by Government to ensure supply of yarn to weavers at reasonable prices.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையில் கண்டிருக்கிற விவரப்படி நியாய விலையில் நூல் கிடைக்கவில்லையென்பது அரசாங்கத்தின் கவனத்திற்குப் பின்னராவது வந்ததா? அப்போது நிர்ணயித்த விலையின் அடிப்படையில் நூல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சில மாதங்களுக்குச் சர்க்கார் செய்து வைத்த ஒப்பந்தப்படி நூல் கிடைத்துக்கொண்டிருந்தது. ஆனால் தீபாவளிக்கு ஒரு மாதம் முன்பு இருந்தே நியாய விலையில் நூல் கிடைக்கவில்லை. முக்கியமாக தென்னிந்திய மில் முதலாளிகள் சங்கத்தார் கூட்டுறவு சங்கத்தாருக்கு வேண்டிய நூலைக் கொடுக்க ஒத்துக் கொண்டார்கள். வெளியில் இருக்கிற தறிக்குக் கொடுக்க ஒத்துக்கொள்ளவில்லை. அதனால்தான் இந்த நெருக்கடி அதிகமாக ஏற்பட்டது. சர்க்கார் இதில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க இயலாது. இது சட்ட பூர்வமான கட்டுப்பாடு அல்ல. சர்க்கார் தலையிட்டு நேரிடையாகச் செய்து வைத்த சமரச ஏற்பாடுதான். ஆகவே சர்க்கார் இதில் சட்டப்படி ஒன்றும் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு முடியவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அரசாங்கத்திற்குக் கொடுத்த கௌரவமான வாக்குறுதியை மில் முதலாளிகள் மீறியிருக்கிறார்கள் என்பது உண்மையா? ஒருசிலர் அப்படி மீறவில்லை என்று சர்க்கார் மீது குற்றம் சொல்கிறார்களே, அதன் விவரம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வேண்டுமானால் தனிக் கேள்வி போட்டால்—கோயம்புத்தூரில் நடந்த மகாநாட்டின் மினிட்ஸ் தயார் செய்து வைத்திருக்கிறோம்—அதை மேஜை மீது வைக்கத் தயாராய் இருக்கிறேன்.

தொழில்கள் (சைதாப்பேட்டை தொகுதி)

*973 கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சைதை தொகுதியில் அமைந்துள்ள தனியார் துறை, பொதுத்துறை தொழில்கள் யாவை ?